ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## திருமங்கை ஆழ்வார் மங்காளசாசனப் பாசுரங்கள்



திருமங்கைஆழ்வார் குமுதவல்லி நாச்சியார், திருநகரி

திருமங்கையாழ்வார் பல திவ்ய தேசங்களை நேரில் சென்று மங்களாசாசனம் செய்து பல பாசுரங்கள் அருளியுள்ளர். இவர் மொத்தமாக 86 திவ்ய தேசங்களை மங்களாசாசனம் செய்து உள்ளார். அவற்றுள் சில பாசுரங்களை இங்கே அனுபவிக்கலாம். கீழே கொடுக்க பட்டுள்ள திவ்ய தேச வரிசைக்கிரமம் புத்தூர் ஸ்வாமி பதிப்பித்துள்ள நாலாயிர திவ்ய ப்ரபந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டது. எல்லோரும் படித்து மகிழவும்.

1) திருஅட்டபுயகரம் - பெரிய திருமொழி - 2-8-1

திரிபுரம் மூன்று எரித்தானும் மற்றைமலர் மிசை மேல் அயனும் வியப்ப
முரிதிரைமாகடல்போல்முழங்கி மூவுலகும் முறையால் வணங்க
எரியனகேசரவாள் எயிற்றோடு இரணியன் ஆகம் இரண்டு கூறா
அரி உருவாம் இவரார் கொல்? என்ன **அட்டபுயகரத்தேன்** என்றாரே.

2) திருஅத்தியூர் (சின்ன காஞ்சீபுரம் தேவப்பெருமாள் சன்னதி) - திருநெடுந்தாண்டகம் 15ஆம் பாசுரம்

கல்லுயர்ந்த நெடுமதிள் சூழ் **கச்சி** மேய
களிறு! என்றும் கடல் கிடந்த கனியே! என்றும்
அல்லியம் பூமலர்ப் பொய்கைப் பழனவேலி
அணியழுந்தூர் நின்றுகந்த அம்மான்! என்றும்
சொல் உயர்ந்த நெடுவீணை முலை மேல் தாங்கித்
தூமுறுவல் நகை இறையே தோன்றநக்கு
மெல்விரல்கள் சிவப்பு எய்தத் தடவி ஆங்கே
மென்கிளி போல் மிகமிழற்றும் என்பேதயே.

3) திருஅயோத்தி - பெரிய திருமொழி - 10-3-8

கவள யானை பாய்புரவி தேரோடு அரக்கர் எல்லாம்
துவள வென்ற வென்றியாளன்தன் தமர் கொல்லாமே
தவள மாட **நீடயோத்திக்** காவலன் தன் சிறுவன்
குவளை வண்ணன் காண ஆடீர் குழமணி தூரமே.

4) திருஅரங்கம் - பெரிய திருமொழி - 5-8-9

துளங்குநீண்முடி அரசர்தம் குரிசில்
தொண்டை மன்னவன் திண்திறல் ஒருவற்கு
உளங்கொள் அன்பினோடு இன்னருள் சுரந்து
அங்கோடு நாழிகை ஏழுடன் இருப்ப
வளங்கொள் மந்திரம் மற்றவற்கு அருளிச்
செய்தவாறு அடியேன் அறிந்து உலகம்
அளந்த பொன்னடியே அடைந்து உய்ந்தேன்
அணிபொழில் **திருவரங்கத்தம்மானே.**

5) திரு அரிமேயவிண்ணகரம் (குடமாடு கூத்தர் சன்னிதி திருநாங்கூர்) - பெரிய திருமொழி - 3-10-8

கன்றதனால் விளவெறிந்து கனி உதிர்த்த காளை
காமரு சீர் முகில் வண்ணன் காலிகள் முன் காப்பன்
குன்றதனால் மழை தடுத்துக் குடமாடு கூத்தன்
குலவும் இடம் கொடி மதிள்கள் மாளிகை கோபுரங்கள்
துன்று மணி மண்டபங்கள் சாலைகள் தூமறையோர்
தொக்கு ஈண்டித் தொழுதியொடு மிகப் பயலும் சோலை
அன்று அலர்வாய் மது உண்டு அங்கு அளிமுரலும் நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே!

6) திரு அல்லிக்கேணி - பெரிய திருமொழி - 2-3-6

அந்தகன் சிறுவன் அரசர் தம் அரசற்கிளையவன் அணியிழையைச் சென்று
எந்தமக்கு உரிமை செய் எனத் தரியாது எம்பெருமான்! அருள் என்ன
சந்தமர் குழலாள் அலக்கண் நூற்றுவர் தம் பெண்டிரும் எய்தி நூல் இழப்ப
இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே.

7) திருஅழுந்தூர் (தேரழுந்தூர்) - பெரிய திருமொழி - 7-5-5

பகலும் இரவும் தானேயாய்ப் பாரும் விண்ணும் தானேயாய்
நிகரில் சுடராய் இருளாகி நின்றார் நின்ற ஊர் போலும்
துகிலின் கொடியும் தேர்த்துகளும் துன்னி மாதர் கூந்தல் வாய்
அகிலின் புகையால் முகில் ஏய்க்கும் அணியார் வீதி அழுந்தூரே.

8) திரு ஆதனூர் - பெரிய திருமடல் - 130 கண்ணி

அன்னவனை ஆதனூர் ஆண்டளக்கும் ஐயனை

9) திரு ஆய்ப்பாடி - பெரிய திருமொழி - 1-8-4

பார்தார்க்காய் அன்று பாரதம் கை செய்திட்டு வென்றபரஞ்சுடர்
கோத்து அங்கு ஆயர் தம் பாடியில் குரவை பிணைந்த எங்கோவலன்
ஏத்துவார் தம் மனத்துள்ளான் இடவெந்தை மேவிய எம்பிரான்
தீர்த்த நீர்த்தடஞ்சோலை சூழ் திருவேங்கடம் அடை நெஞ்சமே!

## 10) திரு ஆலி (திருவாலி/திரு நகரி) - பெரிய திருமொழி - 3-5-1

வந்துஉனது அடியேன் மனம் புகுந்தாய் புகுந்ததற் பின் வணங்கும். என்
சிந்தனைக்கு இனியாய்! திருவே! என் ஆருயிரே!
அந்தளிரணியா் அசோகின் இளந்தளிா்கள் கலந்து அவை எங்கும்
செழ்தழல் புரையும் திருவாலி அம்மானே!

## 11) திருஇடவெந்தை - பெரிய திருமொழி - 2-7-8

அலங்கெழு தடக்கை ஆயன் வாயாம்பற்கு அழியுமால் என் உள்ளம் என்னும்
புலங்கெழு பொருநீா்ப் புட்குழி பாடும் போதுமோ நீா்மலைக்கு? என்னும்
குலங்கெழு கொல்லி கோமளவல்லி கொடி இடை நெடு மழைக் கண்ணி
இலங்கெழில் தோளிக்கு என் நினைந்திருந்தாய்? இடவெந்தைஎந்தைபிரானே!

## 12) திரு இந்தளூா் - பெரிய திருமொழி - 4-9-8

முன்னை வண்ணம் பாலின் வண்ணம் முழுதும் நிலை நின்ற
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம் வண்ணம் எண்ணுங்கால்
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் புரையும் திருமேனி
இன்ன வண்ணம் என்று காட்டீா் இந்தளூரீரே!

## 13) திரு ஊரகம் (உலகளந்த பெருமாள் கோவில்) - திருநெடுந்தாண்டகம் - 13ஆம் பாசுரம்

கல் எடுத்துக் கல்மாரி காத்தாய்! என்றும்
காமரு பூங்கச்சி ஊரகத்தாய்! என்றும்
வில் இறுத்து மெல்லியல் தோள் தோய்ந்தாய்! என்றும்
வெ∴காவில் துயில் அமா்ந்த வேந்தே! என்றும்
மல் அடா்த்து மல்லரை அன்று அட்டாய்! என்றும்
மாகீண்ட கைத்தலத்து என்மைந்தா! என்றும்
சொல் எடுத்துத் தன் கிளியைச் சொல்லே என்று
துணை முலை மேல் துளி சோரச் சோா்கின்றாளே!

## 14) திரு எவ்வுள் (திருவள்ளூர்) - பெரிய திருமொழி - 2-2-3

முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து அரக்கன்
மன்னூர் தன்னை வாளியினால் மாள முனிந்து அவனே
பின்னோர் தூது ஆதி மன்னர்க்காகிப் பெருநிலத்தார்
இன்னார் தூதன் என நின்றான் எவ்வுள் கிடந்தானே.

## 15) திருக்கடல்மல்லை (மஹாபலிபுரம்) - பெரிய திருமொழி - 2-5-9

தொண்டாயார் தாம் பரவும் அடியினானைப்
படி கடந்த தாளாளற்கு ஆளாய் உய்தல்
விண்டானை தென்னிலங்கை அரக்கர் வேந்தை
விலங்குண்ண வலங்கை வாய்ச் சரங்கள் ஆண்டு
பண்டாய வேதங்கள் நான்கும் ஐந்து
வேள்விகளும் கேள்வியோடு அங்கம் ஆறும்
கண்டானை. தொண்டனேன் கண்டு கொண்டேன்
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே.

## 16) திருக்கடிகை (சோளிங்கர்) - பெரிய திருமொழி - 8-9-4

மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்
புக்கானைப் புகழ் சேர் பொலிகின்ற பொன் மலையை
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசை இருந்த
அக்காராக்கனியை அடைந்து உய்ந்து போனேனே.

## 17) திக்கண்டியூர் - திருகுறுந்தாண்டகம் - 19ஆம் பாசுரம்

பிண்டியார் மண்டை ஏந்திப் பிறர்மனை திரிதந்து உண்ணும்
முண்டியான் சாபம்தீர்த்த ஒருவன் ஊர். உலகம் ஏத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை என்று
மண்டினார். உய்யல் அல்லால் மற்றையார்க்கு உய்யலாமே?.

18) திருகண்ணங்குடி - பெரிய திருமொழி 9-1-5

மன்னவன் பெரிய வேள்வியில் குறளாய் மூவடி நீரொடும்கொண்டு
பின்னும் ஏழுலகும் ஈரடியாகப் பெரிந்திசை அடங்கிட நிமிர்ந்தோன்
அன்னமென் கமலத்தணி மலர்ப்பிடத்து அலைபுனல் இலைக்குடை நீழல்
செந்நெல் ஒண்கவரி அசைய வீற்றிருக்கும் திருகண்ணங்குடியில் நின்றானே.

19) திருக்கண்ணபுரம் - பெரிய திருமொழி 8-10-3

மற்றும்ஓர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு
உற்றிலேன். உற்றதும் உன் அடியார்க்கு அடிமை
மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும்
கற்று நான் கண்ணபுரத்துறை அம்மானே.

20) திருக்கண்ணமங்கை - பெரிய திருமொழி - 7-10-3

எங்களுக்கு அருள்செய்கின்ற ஈசனை வாசவார் குழலாள் மலை மங்கை தன்
பங்கனை.பங்கில்வைத்துகந்தான் தன்னைப் பான்மையைாப்பனிமாமதியம் தவழ்
மங்குலைச் சுடரை வட மாமலை உச்சியை நச்சி நாம் வணங்கப்படும்
கங்குலை. பகலைச் சென்று நாடிக் கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே.

21) திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்) - பெரிய திருமொழி 5-6-2

பேரானைக் குறுங்குடி எம்பெருமானை. திருத்தண்கால்
ஊரானைக் கரம்பனூர் உத்தமனை. முத்திலங்கு
காரார் திண் கடல் ஏழும் மலை ஏழு இங்வுலகேழு உண்டும்
ஆராதென்று இருந்தானைக் கண்டது தென்னரங்கத்தே.

22) திருக்கள்வனூர்
23) திருக்காரகம்
24) திருகார்வானம்

**இந்த மூன்று திவ்ய தேசத்தையும் திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகம் 8ஆம் பாசுரத்தில் மங்களாசாசனம் செய்து உள்ளார்.**

நீரகத்தாய் நெடுவரையின் உச்சி மேலாய் !
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய். ஒண்துறை நீர் வெ.்.கா உள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா
காமரு பூங்காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராது என் நெஞ்சின் உள்ளாய்!
பெருமான்! உன் திருவடியே பேணினேனே.

## 25) திருக்காவளம்பாடி - பெரிய திருமொழி 4-6-5

படவர உச்சி தன்மேல பாய்ந்து பல் நடங்கள் செய்து
மடவரல் மங்கை தன்னை மார்வகத்து இருத்தினானே!
தடவரை தங்கு மாடத் தகு புகழ் நாங்கை மேய
கடவுளே! காவளந்தண்பாடியாய் களைகண் நீயே.

## 26) திருக்காழிச்சீரமா விண்ணகரம் (சீர்காழி) -பெரிய திருமொழி 3-4-1

ஒருகுறளாய் இருநிலம் மூவடி மண்வேண்டி
உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி. ஒன்றும்
தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தளைணைவீர். தக்ககீர்த்தி
அருமறையின் திரள் நான்கும் வேள்வி ஐந்தும்
அங்கங்கள் அவையாறும் இசைகள் ஏழும்
தெருவில் மலிவிழா வளமும் சிறக்கும் காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே.

## 27) திருக்குடந்தை - பெரிய திருமொழி - 1-1-7

இற்பிற்பறியீர் இவர் அவர் என்னீர் இன்னதோர் தன்மை என்று உணரீர்
கற்பகம் புலவர்களைகணென்று உலகில் கண்டவா தொண்டரைப் பாடும்
சொற்பொருளாளீர் சொல்லுகேன் வம்மின் சூழ்புனற் குடந்தையே தொழுமின்
நற்றொருள் காண்மின் பாடி நீர் உய்ம்மின் நாராயணா என்னும் நாமம்.

## 28) திருக்குறுங்குடி - பெரிய திருமொழி 9-6-9

நின்ற வினையும் துயரும் கெட மாமலர் ஏந்தி
சென்று பணிமின் எழுமின் தொழுமின் தொண்டீர்காள்!
என்றும் இரவும் பகலும் வரிவண்டு இசைபாட
குன்றின் முல்லை மன்றிடை நாறும் **குறுங்குடியே.**

## 29) திருக்கூடலூர்(ஆடுதுறைப்பெருமாள் கோயில்)-பெரியதிருமொழி5-2-6

தக்கன் வேள்வி தகர்த்த தலைவன்
துக்கம் துடைத்த துணைவர் ஊர் போல்
எக்கலிடு நுண்மணல்மேல் எங்கும்
கொக்கின் பழம் வீழ் **கூடலூரே.**

## 30) திருக்கூடல்(மதுரைக்கூடலழகர் கோயில்)-பெரிய திருமொழி-9-2-5

கோழியும் **கூடலும்** கோயில் கொண்ட கோவலரே ஒப்பர் குன்றம் அன்ன
பாழியந்தோளும் ஓர் நான்குடையர் பண்டு இவர் தம்மையும் கண்டறியோம்
வாழியரோ இவர் வண்ணம் எண்ணில் மாகடல் போன்றுளர் கையில் வெய்ய
ஆழி ஒன்றேந்தி ஓர் சங்கு பற்றி அச்சோ ஒருவர் அழகிவா!.

## 31) திருக்கோஷ்டியூர் - பெரிய திருமொழி - 9-10-2

எவ்வநோய் தவிர்ப்பான் எமக்கிறை இன்னகைத்துவர்வாய். நிலமகள்
செவ்வி தோய வல்லான் திருமாமகட்கு இனியான்
மௌவல் மாலை வண்டாடும் மல்லிகை மாலையொடு மணந்து. மாருதம்
தெய்வ நாற வரும் **திருக்கோட்டியூரானே.**

## 32) திருக்கோவலூர் - பெரிய திருமொழி 2-10-9

தூவடிவின் பார்மகள் பூமங்கையோடு
சுடர் ஆழி சங்கு இருபால் பொலிந்து தோன்ற
காவடிவின் கற்பகமே போல நின்று
கலந்தவர்கட்கு அருள்புரியும் கருத்தினானை
சேவடி கை திருவாய் கண் சிவந்த ஆடை
செம்பொன் செய் திரு உருவம் ஆனான் தன்னை
தீவடிவின் சிவன் அயனே போல்வார் மன்னு
**திருக்கோவலூர்** அதனுள் கண்டேன் நானே.

33) திருக்கோழி (உறையூர்)- பெரிய திருமொழி 9-2-5

**கோழியும்** கூடலும் கோயில் கொண்ட கோவலரே ஒப்பர் குன்றம் அன்ன
பாழியந்தோளும் ஓர் நான்குடையர் பண்டு இவர் தம்மையும் கண்டறியோம்
வாழியரோ இவர் வண்ணம் எண்ணில் மாகடல் போன்றுளர் கையில் வெய்ய
ஆழி ஒன்றேந்தி ஓர் சங்கு பற்றி அச்சோ ஒருவர் அழகிவா!.

34) திருச்சாளக்கிரமாம் - பெரிய திருமொழி 1-5-9

தொண்டாம் இனமும் இமையோரும் துணைநூல் மார்பின் அந்தணரும்
அண்டா! எமக்கே அருளாய் என்று அணயும் கோயில் அருகெல்லாம்
வண்டார் பொழிலின்பழனத்து வயலின் அயலே கயல் பாய
தண்தாமரைகள் முகமலர்த்தும் **சாளக்கிராமம்** அடை நெஞ்சே!

35) திருச்சிங்கவேள் குன்றம் (அகோபிலம்) - பெரிய திருமொழி 1-7-9

நல்லை நெஞ்சே! நாம் தொழுதும் நம்முடை நம்பெருமான்
அல்லி மாதர் புல்க நின்ற ஆயிரந்தோளனிடம்
நெல்லி மல்கிக் கல்லுடைப்பப் புல்லிலை ஆர்த்து அதர்வாய்ச்
சில்லு சில்லென்றொல்லறாத **சிங்கவேள் குன்றமே.**

36) திருச்சித்திரகூடம் (சிதம்பரம்) - பெரிய திருமொழி 3-3-9

கருமுகில் போல்வது ஓர் மேனி கையன ஆழியும் சங்கும்
பெருவிறல் வானவர் சூழ ஏழுலகும் தொழுது ஏத்த
ஒருமகள் ஆயர் மடந்தை ஒருத்தி நிலமகள் மற்றைத்
திருமகளோடும் வருவான் **சித்திரகூடத்து உள்ளானே.**

37) திருசிறுபுலியூர் - பெரிய திருமொழி 7-9-9

கருமா முகில் உருவா! கனல் உருவா! புனல் உருவா!
பெருமால் வரை உருவா! பிற உருவா! நினதுருவா!
திருமாமகள் மருவும் **சிறுபுலியூர்ச் சலசயனத்து**
அருமா கடல் அமுதே! உனது அடியே சரணமே.

## 38) திருச்செம்பொன் செய்கோயில் - பெரிய திருமொழி 4-3-1

பேரணிந்து உலகத்தவர் தொழுதேத்தும் பேரருளாளன் எம்பிரானை
வாரணி முலையாள் மலர்மகளோடு. மண்மகளும் உடன் நிற்ப
சீரணி மாட நாங்கை நன்னடுவுள் **செம்பொன்செய் கோயிலின்** உள்ளே
காரணி மேகம் நின்றது ஒப்பானைக் கண்டு கொண்டு உய்ந்தொழிந்தேனே.

## 39) திருச்சேறை - பெரிய திருமொழி 7-4-2

அம்புருவவரிநெடுங்கண் அலர் மகளை வரை அகலத்தமர்ந்து மல்லல்
கொம்புருவவிளங்கனிமேல் இளங்கன்று கொண்டெறிந்த கூத்தர் போலாம்
வம்பலரும்தண்சோலை **வண்சேறை** வான்உந்து கோயில் மேய
எம்பெருமான் தாள் தொழுவார். எப்பொழுதும் என் மனத்தே இருக்கின்றாரே.

## 40) திருத்தஞ்சைமாமணிக்கோயில் (தஞ்சாவூர்)- பெரிய திருமொழி 1-1-6

எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம் எனக்கரசு என்னுடை வாணாள்
அம்பினால்அரக்கர் வெருக்கொளநெருக்கி அவருயிர் செகுத்த எம் அண்ணல்
வம்புலாம் சோலை மாமதிள் **தஞ்சை மாமணிக்கோயிலே** வணங்கி
நம்பிகாள்! உய்ய நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

## 41) திருத்தண்கா (காஞ்சீ) - பெரியதிருமொழி 10-1-2

பொன்னை மாமணியை அணி ஆர்ந்ததோர்
மின்னை. வேங்கடத்து உச்சியில் கண்டு போய்
என்னை ஆளுடை ஈசனை எம்பிரான்
தன்னை. யாம் சென்று காண்டும் **தண்காவிலே.**

## 42) திருத்தண்கால் - திருநெடுந்தாண்டகம் 17ஆம் பாசுரம்

பொங்கார் மெல்லிளம் கொங்கை பொன்னே பூப்பப்
பொருகயல் கண்நீர் அரும்பப் போந்து நின்று
செங்கால மடப்புறவம் பெடைக்குப் பேசும்
சிறு குரலுக்கு உடல் உருகிச்சிந்தித்து. ஆங்கே
**தண்காலும்** தண்குடந்தையும் நகரும்பாடித்
தண்கோவலூர் பாடி ஆடக்கேட்டு
நங்காய்! நங்குடிக்கு இதுவோ நன்மை? என்ன
நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே.

43) திருத்தலைச்சங்கநாண்மதியம் (தலைச்சங்காடு) - பெரிய திருமடல் -132ஆம் கண்ணி

நல்நீர்த் தலைச்சங்கநாண்மதியை

44) திருத்துவராபதி - பெரியதிருமொழி 6-8-7

கட்டேறு நீள் சோலைக் காண்டவத்தைத் தீமுட்டி
விட்டானை. மெய்யம் அமர்ந்த பெருமானை
மட்டேறு கற்பகத்தை மாதர்க்காய். வண் துவரை
நட்டானை நாடி நறையூரில் கண்டேனே.

45) திருத்தெற்றி அம்பலம் (பள்ளிகொண்ட பெருமாள் திருநாங்கூர்) பெரியதிருமொழி 4-4-8

சிலம்பினிடை சிறு பரல் போல் பெரிய மேரு
திருக்குளம்பில் கணகணப்பத் திருவாகாரம்
குலுங்க. நில மடந்தை தனை இடந்து புல்கிக்
கோட்டிடை வைத்து அருளிய எம்கோமான் கண்டீர்
இலங்கிய நான்மறை அனைத்தும் அங்கம் ஆறும்
ஏழிசையும் கேள்விகளும் எண்திக்கு எங்கும்
சிலம்பிய நற்பெருஞ்செல்வம் திகழும் நாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே.

46) திருத்தேவனார்தொகை (கீழைச்சாலை) - பெரியதிருமொழி 4-1-8

வாராரும் இளங்கொங்கை மைதிலியை மணம்புணர்வான்
காரார் திண்சிலை இறுத்த தனிக்காளை கருதுமிடம்
ஏராரும் பெருஞ்செல்வத்து எழில் மறையோர் நாங்கை தன்னுள்
சீராரும் மலர்ப்பொழில் சூழ் திருத்தேவனார்தொகையே.

47) திருநந்திபுரவிண்ணகரம் (நாதன் கோயில்) - பெரியதிருமொழி 5-10-6

தம்பியொடு தாம் ஒருவர் தன் துணைவி காதல் துணையாக முனநாள்
வெம்பி எரி கானகம் உலாவும் அவர்தாம் இனிது மேவு நகர் தான்
கொம்பு குதி கொண்டு குயில் கூவ மயில் ஆலும் எழிலார் புறவு சேர்
நம்பி உறைகின்ற நகர் நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே!

## 48) திருநறையூர் - பெரியதிருமொழி 6-9-6

பொன்முத்தும் அரியுகிரும் புழைக் கைம்மா கரிக்கோடும்
மின்னத் தண் திரை உந்தும் வியன் பொன்னித் **திருநறையூர்**
மின்னொத்த நுண்மருங்கொல் மெல்லியலை திருமார்பில்
மன்னத்தான் வைத்துகந்தான் மலரடியே அடைநெஞ்சே.

## 49) திருநாகை (நாகப்பட்டிணம்) - பெரியதிருமொழி 9-2-4

வம்பவிழும் துழாய் மாலை தோள் மேல் கையன ஆழியும் சங்கும் ஏந்தி
நம்பர் நம் இல்லம் புகுந்து நின்றார் நாகரிகர் பெரிதும் இளையர்
செம்பவளம் இவர் வாயின் வண்ணம் தேவர் இவரது உருவம் சொல்லில்
அம்பவளத் திரளேயும் ஒப்பர் **அச்சோ ஒருவன் அழகியவா.**

## 50) திருநாவாய் - பெரியதிருமொழி 6-8-3

தூவாய புள் ஊர்ந்து வந்து துறை வேழம்
மூவாமைநல்கி முதலை துணித்தானை
தேவாதிதேவனைச் செங்கமலக்கண்ணனை
**நாவாயுளானை** நறையூரில் கண்டேனே.

## 51) திருநிலாத்திங்கள் துண்டம் - திருநெடுந்தாண்டகம் 8ஆம் பாசுரம்

நீரகத்தாய் நெடுவரையின் உச்சி மேலாய் !
**நிலாத்திங்கள்** துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய். ஒண்துறை நீர் வெ.ஃ.கா உள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா!
காமரு பூங்காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராது என் நெஞ்சின் உள்ளாய்!
பெருமான்! உன் திருவடியே பேணினேனே.

## 52) திருநின்றவூர் - பெரியதிருமொழி 2-5-2

பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப்
பொய்ந்நூலை மெய்ன்நூல் என்று என்றும் ஓதி
மாண்டு. அவத்தம் போகாதே வம்மின் எந்தை
என் வணங்கப்படுவானை. கணங்கள் ஏத்தும்
நீண்டவத்தைக் கருமுகிலை எம்மான் தன்னை
நின்றவூர் நித்திலத்தை தொத்தார்சோலை
காண்டவத்தைக் கனல் எரிவாய்ப் பெய்வித்தானைக்
கண்டது நான் கடல்மல்லை தலசயனத்தே.

## 53) திருநீரகம் (காஞ்சீ ஜகதிசப் பெருமாள்) - திருநெடுந்தாண்டகம் 8ஆம் பாசுரம்

நீரகத்தாய் நெடுவரையின் உச்சி மேலாய் !
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறை நீர் வெ.்.கா உள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா!
காமரு பூங்காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராது என் நெஞ்சின் உள்ளாய்!
பெருமான்! உன் திருவடியே பேணினேனே.

## 54) திருநீர்மலை - பெரியதிருமொழி 2-4-1

அன்றாயர் குலக்கொடியோடு. அணிமாமலர் மங்கையொடுஅன்பளவி.அவுணர்க்கு
என்தானும் இரக்கமிலாதவனுக்கு உறையும் இடமாவது. இரும்பொழில் சூழ்
நன்றாய புனல் நறையூர் திருவாலி குடந்தை தடம் திகழ் கோவல் நகர்.
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு இடம் மாமலையாவது நீர்மலையே.

## 55) திருநைமிசாரண்யம் - பெரியதிருமொழி 1-6-9

ஊனிடைச் சுவர்வைத்து எள்புதூண்நாட்டி உரோமம் வேய்ந்து ஒன்பது வாசல்
தானுடைக் குரம்பை பிரியும்போது உன்தன் சரணமேசரணம் என்று இருந்தேன்
தேனுடைக்கமலத்திருவினுக்கரசே! திரைகொள்மாநெடுங்கடல்கிடைந்தாய்!
நானுடைத் தவத்தால் திருவடிய அடைந்தேன் நைமிசாரணியத்துள் எந்தாய்.

## 56) திருப்பரமபதம் - திருக்குறுந்தாண்டகம் 11ஆம் பாசுரம்

தொண்டெல்லாம் பரவி நின்னைத் தொழுது அடி பணியுமாறு
கண்டு தான் கவலை தீர்ப்பான் ஆவதே? பணியாய் எந்தாய்!
அண்டமாய் எண்திசைக்கும் ஆதியாய் ! நீதியான
பண்டமாம் பரமசோதி நின்னையே பரவுவேனே.

## 57) திருப்பரமேச்சுரவிண்ணகரம் - பெரியதிருமொழி 2-9-3

உரந்தருமெல்லனைப்பள்ளிகொண்டான் ஒருகால்முன்னம்மாவுருவாயக் கடலுள்
வரந்தருமாமணிவண்ணனிடம் மணிமாடங்கள்சூழ்ந்துஅழகாயகச்சி
நிரந்தவர்மண்ணையில்புண்ணுகர்வேல் நெடுவாயில் உகச்செருவில்முனநாள்
பரந்தவன் பல்லவர் கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம் அதுவே.

## 58) திருப்பவளவண்ணம் - திருநெடுந்தாண்டகம் 9ஆம் பாசுரம்

வங்கத்தால் மாமணி வந்து உந்து முந்நீர்
மல்லையாய் மதில்கச்சி ஊராய் பேராய்
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய் !
பனி வரையின் உச்சியாய் ! பவளவண்ணா!
எங்குற்றாய்? எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழி தருகேனே.

## 59) திருபாடகம் (பண்டவதூர்) - பெரியதிருமொழி 6-10-4

கல்லார் மதிள் சூழ் கச்சி நகருள் நச்சிப், பாடகத்துள்
எல்லா உலகும் வணங்க இருந்த அம்மான். இலங்கைக்கோன்
வல்லாள் ஆகம் வில்லால் முனிந்த எந்தை. விபீடணற்கு
நல்லான் உடைய நாமம் சொல்லில் நமோ நாரயணமே.

## 60) திருபார்த்தன்பள்ளி - பெரியதிருமொழி 4-8-9

கண்ணன் என்றும் வானவர்கள் காதலித்து மலர்கள் தூவும்
எண்ணன் என்றும் இன்பன் என்றும் ஏழுலகுக்கு ஆதி என்றும்
திண்ண மாட நீடு நாங்கைத் தேவதேவன் என்றென்று ஓதி
பண்ணின் அன்ன மென்மொழியாள் பார்த்தன்பள்ளி பாடுவாளே.

61) திருபாற்கடல் பெரியதிருமொழி 1-6-6

கோடியமனத்தால்சினத்தொழில்புரிந்து திரிந்து நாய் இனத்தொடும் திளைத்திட்டு
ஓடியும்உழன்றும்உயிர்களேகொன்றேன் உணர்விலேனாதலால். நமனார்
பாடியைப்பெரிதும் பரிசழித்தேட்டேன் பரமனே! பாற்கடல் கிடந்தாய்
நாடி நான் வந்து உன் திருவடி அடைந்தேன் நைமிசாரணியத்துள் எந்தாய்!

62) திருப்பிரிதி - பெரியதிருமொழி 1-2-5

கரைசெய்மாக்கடல்கிடந்தவன் கனைகழல் அமரர்கள் தொழுதேத்த
அரைசெய்மேகலை அலர்மகள் அவளொடும் அமர்ந்த நல் இமயத்துள்
வரைசெய்மாக்களிறுஇளவெதிர்வளர்முளை அளைமிகுதேன்தோய்த்து
பிரசவாரி தன் இளம் பிடிக்கு அருள் செயும் பிரிதி சென்றடை நெஞ்சே.

63) திருப்புட்குழி - பெரியதிருமொழி 2-7-8

அலங்கெழு தடக்கை ஆயன் வாயம்பற்கு அழியுமால் என் உள்ளம் என்னும்
புலங்கெழுபொருநீர்ப்புட்குழிபாடும் போதுமோ நீர்மலைக்கு? என்னும்
குலங்கெழு கொல்லி கோமளவல்லி கொடியிடை நெடு மழைக் கண்ணி
இலங்கெழில் தோளிக்கு என் நினைந்திருந்தாய்? இடவெந்தை எந்தை பிரானே!

64) திருப்புலியூர் - சிறியதிருமடல் - 71ஆம் கண்ணி

பேராலி தண்கால் நறையூர் திருப்பூலியூர்

65) திருப்புல்லாணி - பெரியதிருமொழி 9-3-4

கொங்குண் வண்டே கரியாக வந்தான் கொடியேற்கு முன்
நங்களீசன் நமக்கே பணித்த மொழி செய்திலன்
மங்கை நல்லாய்! தொழுதும்எழு. போய் அவன் மன்னுமூர்
பொங்கு முந்நீர்க்கரைக்கே மணியுந்து புல்லாணியே.

## 66) திருப்புள்ளம்பூதங்குடி - பெரியதிருமொழி 5-1-5

மையார் தடங்கண் கருங்கூந்தல் ஆய்ச்சி மறை வைத்த தயிர்
நெய்யார் பாலோடு அமுது செய்த நேமி அங்கை மாயனிடம்
செய்யார் ஆரல் இரை கருதிச் செங்கால் நாரை சென்றணையும்
பொய்யா நாவின் மறையாளர் **புள்ளம் பூதங்குடி** தானே.

## 67) திருப்பேர் நகர் (கோவிலடி அப்பக்குடத்தான்) - பெரியதிருமொழி 5-9-9

நால் வகை வேதம் ஐந்து வேள்வி ஆறங்கம் வல்லார்
மேலை வானவரில் மிக்க வேதியர் ஆதி காலம்
சேலுகள் வயல் **திருப்பேர்ச்** செங்கண் மாலொடும் வாழ்வார்
சீலமாதவத்தர் சிந்தையாளி என்சிந்தையானே.

## 68) திருமணிக்கூடம் - பெரியதிருமொழி 4-5-5

கருமகள் இலங்கையாடடி பிலங்கொள் வாய் திறந்து. தன் மேல்
வருமவள் செவியும் மூக்கும் வாளினால் தடிந்த எந்தை
பெருமகள் பேதை மங்கை தன்னொடும் பிரிவிலாத
திருமகள் மருவும் நாங்கூர்த் **திருமணிக்கூடத்தானே.**

## 69) திருமணிமாடக்கோயில் (நாராயணப்பெருமாள் சன்னதி) - பெரியதிருமொழி 3-8-8

துளையார் கருமென்குழல் ஆய்ச்சியர்தம்
துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும் முற்றா
இளையார் விளையாட்டொடு காதல் வெள்ளம்
விளைவித்த அம்மானிடம். வேல்நெடுங்கண்
முளைவாள் எயிற்று மடவார் பயிற்று
மொழிகேட்டு இருந்து முதிராத இன்சொல்
வளைவாய கிள்ளை மறைபாடுநாங்கூர்
**மணிமாடக்கோயில்** வணங்கு என் மனனே!

## 70) திருமாலிருஞ்சோலை (அழகர் கோயில்)- பெரியதிருமொழி 11-7-9

தேனோடு வண்டாலும் திருமாலிருஞ்சோலை
தான் இடமாகக் கொண்டான் தடமலர்க் கண்ணிக்காய்
ஆன்விடையேழ் அன்றடர்த்தாற்கு ஆளானார் அல்லாதார்
மானிடவர் அல்லர் என்று என் மனத்தே வைத்தேனே.

## 71) திருமூழிக்களம் - பெரியதிருமொழி 7-1-6

பணியேய் பரங்குன்றின் பவளத் திரளே!
முனியே! திருமூழிக்களத்து விளக்கே!
இனியாய தொண்டரோம் பருகு இன்னமுதாய
கனியே. உன்னைக் கண்டு கொண்டு உய்ந்தொழிந்தேனே.

## 72) திருமெய்யம் - பெரியதிருமொழி 3-6-9

நிலையாளா! நின் வணங்க வேண்டாயே ஆகிலும் என்
முலையாள ஒருநாள் உன் அகலத்தால் ஆளாயே?
சிலையாளா! மரம் எய்த திறலாளா! திருமெய்ய
மலையாள நீயாள வளையாள மாட்டோமே.

## 73) திருமோகூர் - சிறியதிருமடல் - 74ஆம் கண்ணி

சீராரும் மாலிருஞ்சோலை திருமோகூர்

## 74) திருவடமதுரை (மட்ரா) - பெரியதிருமொழி 6-7-5

வில்லார் விழவில் வடமதுரை விரும்பி விரும்பா மல்லடர்த்து
கல்லார் திரள்தோள் கஞ்சனைக்காய்ந்தான் பாய்ந்தான் காளியன்மேல்
சொல்லார் சுருதி முறையோதிச் சோமுச்செய்யும் தொழிலினோர்
நல்லார் மறையோர் பலர் வாழும் நறையூர் நின்ற நம்பியே.

## 75) திருவண்புருடோத்தமன் - பெரியதிருமொழி 4-2-2

பல்லவம் திகழ் பூங்கடம்பு ஏறி அக்காளியன் பணவரங்கில்
ஒல்லை வந்திறப் பாய்ந்து அருநடஞ்செய்த உம்பர் கோன் உறை கோயில்
நல்ல வெந்தழல் மூன்று நால்வேதம் ஐவேள்வியோடு ஆறங்கம்
வல்ல அந்தணர் மல்கிய நாங்கூர் வண்புருடோத்தமமே.

## 76) திருவதரியாச்சிரமம் (பத்ரிநாத்) - பெரியதிருமொழி 1-3-3

உறிகள் போல் மெய்நரம்பு எழுந்து. ஊன் தளர்ந்து உள்ளம் எள்கி
நெறியை நோக்கிக் கண் சுழன்று நின்று நடுங்கா முன்
அறிதியாகில் நெஞ்சம் அன்பாய் ஆயிர நாமம் சொல்லி
வெறிகொள் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே.

## 77) திருவயிந்திரபுரம் (நடுநாடு) - பெரியதிருமொழி 3-1-2

மின்னும் ஆழி அங்கை அவன் செய்யவள் உறை தரு திருமார்பன்
பன்னு நால்மறைப் பல்பொருள் ஆகிய பரனிடம் வரைச்சாரல்
பின்னும் மாதவிப்பந்தலில் பெடைவரப் பிணிஅவிழ் கமலத்து
தென்னவென்று வண்டு இன்னிசை முரல்தரு திருவயிந்திரபுரமே.

## 78) திருவல்லவாழ் (திருவல்லா) - பெரியதிருமொழி 9-7-8

மஞ்சுசேர் வான் எரி நீர் நிலம் கால் இவை மயங்கி நின்ற
அஞ்சுசேர் ஆக்கையை அரணமன்று என்றுய்யக் கருதினாயேல்
சந்துசேர்மென்முலைப் பொன்மலர்ப் பாவையும் தாமும் நாளும்
வந்துசேர் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவுநெஞ்சே.

## 79) திருவிண்ணகர் (உப்பிலி அப்பன்) - பெரியதிருமொழி 6-3-5

மற்றோர் தெய்வம் எண்ணேன் உன்னை என் மனத்துப்
பெற்றேன். பெற்றதுவும் பிறவாமை எம்பெருமான்
வற்றா நீள்கடல்சூழ் இலங்கை இராவணனைச்
செற்றாய் !. கொற்றவனே! திருவிண்ணகரானே !

## 80) திருவெ.்.கா (யதோத்தகாரி பெருமாள் சன்னதி) - பெரியதிருமொழி 10-1-7

கூந்தலார் மகிழ் கோவலனாய் வெண்ணெய்
மாந்தழுந்தையில் கண்டு மகிழ்ந்து போய்
பாந்தள் பாழியில் பள்ளி விரும்பிய
வேந்தனைச் சென்றுகாண்டும் வெ.்.காவுளே.

81) திருவெள்ளக்குளம் (அண்ணன் கோயில்) - பெரியதிருமொழி 4-7-9

பூவார் திருமாமகள் புல்கிய மார்பா !
நாவார் புகழ் வேதியர் மன்னிய நாங்கூர்த்
தேவா! திருவெள்ளக்குளத்து உறைவானே!
ஆவா! அடியான் இவன் என்று அருளாயே.

82) திருவெள்ளறை - பெரியதிருமொழி 5-3-6

பொங்கு நீள்முடி அமரர்கள் தொழுது எழ அமுதினைக் கொடுத்தளிப்பான்
அங்கு ஓர் ஆமை அதாகிய ஆதி! நின் அடிமையை அருள் எனக்கு
தங்கு பேடையோடு ஊடிய மதுகரம் தையலார் குழல் அணைவான்
திங்கள் தோய் சென்னி மாடம் சென்றனை திருவெள்ளறை நின்றானே.

83) திருவெள்ளியங்குடி - பெரியதிருமொழி 4-10-6

காற்றிடைப் பூளை கரந்தன அரந்தையுறக் கடல் அரக்கர் தம் சேனை
கூற்றிடைச்செல்லக்கொடுங்கணை துரந்த கோலவில்லிராமன் தன்கோயில்
ஊற்றிடை நின்ற வாழையின் கனிகள் ஊழ்த்து வீழ்ந்தன உண்டு மண்டி
சேற்றிடைக்கயல்களுகள்திகழ்வயல்சூழ் திருவெள்ளியங்குடி அதுவே.

84) திருவேங்கடம் - பெரியதிருமொழி 1-8-8

அம்பரம் அனல் கால் நிலம் சலமாகி நின்ற அமரர் கோன்
வம்புலாமலர்மேல் மலிமட மங்கைதன் கொழுனன் அவன்
கொம்பினன்ன இடைமடக்குறமாதர் நீளிதணந்தொறும்
செம்புனம்மவை காவல்கொள் திருவேங்கடம் அடை நெஞ்சமே!

85) திருவேளுக்கை - பெரிய திருமடல் - 127 கண்ணி

மன்னும் மதிள் கச்சி வேளுக்கை ஆளரியை

## 86) திருவைகுந்தவிண்ணகரம் - பெரியதிருமொழி 3-9-9

வங்கமலி தடங்கடலுள் வானவர்களோடு
மாமுனிவர்பலர்கூடி மாமலர்கள் தூவி
எங்கள் தனி நாயகனே! எமக்கு அருளாய் என்னும்
ஈசன் அவன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில்
செங்கயலும் வாளைகளும் செந்நெலிடைக் குதிப்பச்
சேலுகளும் செழும்பணை சூழ்வீதிதொறும் மிடைந்து
மங்குல் மதியகடுஉரிஞ்சு மணிமாட நாங்கூர்
**வைகுந்த விண்ணகரம்** வணங்குமடநெஞ்சே!

### மங்கள ஸ்லோகம்

ஸ்ரீமதாலிஸ்ரீநகரீ நாதாய கலிவைரிணே
சதுஷ்கவி ப்ரதாநாய பரகாலாய மங்களம்

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்

வாசிக தோஷ: சஷந்தவ்ய: